## கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2015

கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள அதிகாரச் சட்டத்தின் 59(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்தின் நிகழத்தக்க சொத்தாக இனங்காண முடியுமான, கைப்பற்றப்பட்டு சட்டரீதியான நடவடிக்கைகள் முடியும் வரையிலும் மாவட்ட கடற்றொழில் அலுவலகம், நீதிமன்றம் மற்றும் கடற்படையின் பொறுப்பில் உள்ள கப்பல் மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று நிதிக்கூற்றுக்களில் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎவ் 423 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 04:3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 1,865,239 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 1,452,616 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவில் ரூபா 412,623 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் மூலம் அமுல்படுத்தப்படும் கட்டளைகளை மீறல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் தகவல்களை வழங்குகின்றவர்களுக்கும் வெகுமதிப் பணத்தை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்காக அந்த அதிகாரச்சட்டத்தின் 59 ஆவது பிரிவின் கீழ் கடற்றொழில் வெகுமதி நிதியம் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் தகவல்களை வழங்குவர்களுக்கு வெகுமதிப் பணம் வழங்குவதற்கான முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அரசுடைமையாக்கப்பட்ட பொருள் விற்பனைகளில் பெறப்பட்ட வருமானத்தில் 75 சதவீதத்தை இதற்காகப் பயன்படுத்துவதற்கு நிதி ஏற்பாடு காணப்பட்ட போதும், முன்னைய ஆண்டில் உழைத்த வருமானமான ரூபா 1,452,616 தொகையிலிருந்து எந்தப் பணமும் இதற்காக செலவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் உழைக்கப்பட்ட ரூபா 2,222,614 தொகைகளிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு படிகளாக செலுத்துவதற்கு ரூபா 357,375 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நீர் வளங்களைப் பாதுகாக்கும்

கட்டளைகளை மீறும் நபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் அது தொடர்பான தகவல்களை வழங்குகின்ற நபர்களும் ஊக்குவிப்புச் செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறன் இன்மை

கைப்பற்றப்பட்ட மீன் விற்பனையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரியதாகக் கிடைக்க வேண்டிய முறையே ரூபா 358,230 தொகை மற்றும் ரூபா 193,596 தொகைகள் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

கடற்றொழில் மற்றும் நீர் வள அதிகாரச்சட்டம் மற்றும் அமுல்படுத்தப்படுகின்ற கட்டளைகளை மீறல் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னைய ஆண்டில் 11 மாவட்டங்களில் 268 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் 14 மாவட்டங்களில் 348 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 200 ஆக அடையக்கூடிய மட்டத்தைவிட மிகவும் குறைந்த மட்டத்தில் காட்டப்பட்டிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் கடற்றொழில் வெகுமதி நிதியம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (அ) | புத்தகங்களைப் பேணிச் செல்லல் | - | கைப்பற்றப்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுத்து முடியும் வரை இலங்கை கடற்படை, மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள், நீதிமன்றத்தின் பொறுப்பிலுள்ள கப்பல் மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல்களைப் பேணிச் செல்லல். |
| (ஆ) | உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணம் செலுத்துதல் | - | நிதியத்திற்குக் கிடைக்கின்ற வருமானத்தில் உரிய உத்தியோகத்தர்களுக்கு தாமதமின்றி வெகுமதிப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |